ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2144/25 - 2019 ඔක්තෝබර් මස 09 වැනි බදාදා - 2019.10.09
*2144/25 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: KHDS/LND/03/ACQ/13-2.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2017/VE/425.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கஹவத்தை பிரதேச செயலாளர் பிரிவு, அடகலன் கோரளை பிரிவில் பன்னில் பத்து சிறு நாம்புமுவை கிராமத்தில் அமைந்துள்ள அளவை அதிகாரியால் தயார் செய்யப்பட்ட க.கி.ப.8, பிற்சேர்க்கை இலக்கம் 13, பத்திர இலக்கம் 14 மற்றும் 2019.03.07 ஆந் திகதியினது சுவட்டு வரைபடத்தில் துண்டு இலக்கம் 340 இல் காட்டப்பட்ட 0.3159 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டு:

*01.* **துண்டு இல. *340***
காணியின் பெயர்: வெல்லங்துரை வத்தை; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: கஹவத்தை பெருந்தோட்ட நிறுவனம், இல. 52, மாலிகாவத்த வீதி, கொழும்பு 10; விஸ்தீரணம்: 0.8488 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கஹவத்தை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம்

1A - G 31203 - 43 (2019/10)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பி. ரீ. சுயானி ஐ. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கஹவத்தை.

பிரதேச செயலகம்,
கஹவத்தை,
2019, ஒற்றோபர் 01.

10 - 856

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KHDS/LND/03/other/10.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/99/FR/106.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கஹவத்தை பிரதேச செயலாளர் பிரிவு, அடகலன் கோரளை பன்னில்பத்து சிறு பிரிவில் பன்னில கிராமத்தில் அமைந்துள்ள அளவை அதிகாரியால் தயார் செய்யப்பட்ட க.கி.ப.701, பிற்சேர்க்கை இலக்கம் 23 மற்றும் பத்திர இலக்கம் 23 மற்றும் 2013.07.23 ஆந் திகதியினது சுவடு வரைபடத்தில் துண்டு இலக்கம் 803 இல் காட்டப்பட்ட 0.3159 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம்:

01. **துண்டு இல. 803**
காணியின் பெயர்: கல்வெட வத்தை; விபரம்: 2-10 வயதுடைய தேயிலை மற்றும் காடு; உரிமை கோருபவர்: எஸ். ஏ. ஜயசிங்க தெமுவாத, இரக்வானை; விஸ்தீரணம்: 0.3159 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கஹவத்தை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பி. ரீ. சுயானி ஐ. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கஹவத்தை.

பிரதேச செயலகம்,
கஹவத்தை,
2019, ஒற்றோபர் 01.

10 - 857

---

திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1882/45 ஆம் இலக்க, 03.10.2014 ஆந் திகதியிடப் பட்ட அறிவித்தலின்படி இல. 31 இன் கீழ்க் குறிப்பிடப்பட்ட துண்டு இல. 818 இல் குறிப்பிட்ட விஸ்தீரணம் 0.9937 ஹெக்டயார் என மாற்றப்படல் வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

வசன்தா வர்ணகுலசூரிய,
பிரதேச செயலாளர்,
மஹவ.

பிரதேச செயலகம்,
மஹவ.

10 - 858/1

---

திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1882/45 ஆம் இலக்க, 03.10.2014 ஆந் திகதியிடப் பட்ட அறிவித்தலின்படி இல. 23 இன் கீழ்க் குறிப்பிடப்பட்ட துண்டு இல. 305 இல் குறிப்பிட்ட விஸ்தீரணம் 0.0741 ஹெக்டயார் என மாற்றப்படல் வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

வசன்தா வர்ணகுலசூரிய,
பிரதேச செயலாளர்,
மஹவ.

பிரதேச செயலகம்,
மஹவ.

10 - 858/2

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1882/45 ஆம் இலக்க, 03.10.2014 ஆந் திகதியிடப் பட்ட அறிவித்தலின்படி இல. 39 இன் கீழ்க் குறிப்பிடப்பட்ட துண்டு இல. 828, 829 ஆக திருத்தப்பட வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

வசன்தா வர்ணகுலசூரிய,
பிரதேச செயலாளர்,
மஹவ.

பிரதேச செயலகம்,
மஹவ.

10 - 858/3